# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, கலாநிதி மாலனி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, ஓகத்து மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *11.50*** **தபாற் செலவு : ரூபா *10.00***

**2012 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, கலாநிதி மாலனி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ.கூட். 22/2011*

**கலாநிதி மாலனி பொன்சேகா மன்றத்தினைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

“கலாநிதி மாலனி பொன்சேகா மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகம் அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட அதனது குறிக்கோள்களையும் எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இலங்கையில், தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, கலாநிதி மாலனி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*கலாநிதி மாலனி பொன்சேகா மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கலாநிதி மாலனி பொன்சேகா மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “கலாநிதி மாலனி பொன்சேகா

2-PL 006057 -950 (2011/05)

மன்றம்'' என்னும் பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(1) (அ) அழகியல், அரங்காற்றுகை மற்றும் இலங்கையின் பாரம்பரிய கலைகள் மற்றும் கைப்பணிகளை வளர்த்தலும் பேணிக்காத்தலும் அத்துடன் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஆகிய இரண்டு முறையிலும் அத்தகைய கலைகளையும் கைப்பணிகளையும் மேம்படுத்துதலும் ;

(ஆ) இலங்கைக் கலைஞர்களின் சமூக, கல்விசார் மற்றும் பொருளாதார நியமங்களையும் இலங்கைக் கலைகள் மற்றும் கைப்பணிகளை முன்னேற்றுவதில் ஈடுபட்டிருக்கின்றவர்களையும் முன்னேற்றுவதற்குப் பொருத்தமான வேலைத் திட்டங்களை வகுத்தமைத்தலும் அமுல்படுத்துதலும்;

(இ) இலங்கையின் சிரேஷ்ட பிரசைகள், பெண்கள் மற்றும் சிறுவர்களின் சேமநலத்திற்கென பொருத்தமான வேலைத்திட்டங்களை வகுத்தமைத்தலும் அமுல்படுத்துதலும் ;

(ஈ) இலங்கையில் வறிய மற்றும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் உதவிப் பணங்களையும் வழங்குதலும் குறிப்பாக உயர்கல்வியில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு வசதியளித்தலும் ;

(உ) சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியையும் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியையும் கற்பிப்பதற்குத் தோதான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தலும் அமுல்படுத்துதலும் ;

(ஊ) இலங்கை மாணவர்களின ஆங்கில மொழித் திறனை முன்னேற்றுவதற்குத் தோதான நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தலும் அமுல்படுத்துதலும்;

(எ) குறிப்பாக கிராமப்புற மாணவர்களின் கணனி அறிவை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டு கிராமப் புறத்திலும் அபிவிருத்தியடையாத பிரதேசங்களிலும் தகவல் தொழினுட்ப நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஏ) கிராமப்புற மாணவர்களுக்கு புத்தம்புதிய தொழினுட்பம்சார் தகவல்களையும் வேறு அவசியமான உதவிகளையும் வழங்குவதன்மூலம் கமத்தொழில் மற்றும் மீன்பிடி கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு உதவுதலும் ;

(ஐ) வறியவர்களின் ஒட்டுமொத்த சேமநலன் மற்றும் அபிவிருத்திக்கான வறுமையை மட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தலும் ;

(ஒ) சிறுவர்களினதும் இளைஞர்களினதும் திறமைகளுக்கும் அக்கறைகளுக்கும் இணங்க அவர்களிடையேயான விளையாட்டுக்களுக்கு அனுசரணை வழங்குதலும் மேம்படுத்துதலும் ;

(ஓ) இலங்கையர்களிடையே அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், சனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அத்தகைய கோட்பாடுகள்மீது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தலும் ; அத்துடன்

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோளைப் போன்று அதே குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைத்தலும்.

(2) கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களின் நடைமுறைப்படுத்தல் இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை அல்லது அரசியல் அபிப்பிராயங்களின் அடிப்படை மீதான வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்கள் உட்பட அதன் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எவையேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக் கூடியதான காணிகள் அல்லது கட்டடங்களை கொள்வனவு செய்யவும், கொள்ளவும், வாடகைக்கு விடவும், நிருமாணிக்கவும், புனரமைக்கவும் மற்றும் வேறு வகையில் பெற்றுக் கொள்ளவும் ;

(ஆ) பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி நிதியங்களைக் கடன் எடுப்பதற்கு அல்லது திரட்டுவதற்கு மற்றும் காசாகவோ அல்லது பொருளாகவோ மானியங்கள் கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் :

ஆயின், இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும் சபையானது, எல்லா வெளிநாட்டு மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் முன்னதான எழுத்திலான அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டுமென்பதுடன் கணக்காளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படுதலும் வேண்டும் ;

(இ) செலாவணி உண்டியல்கள், காசோலைகள் வாக்குறுதிப் பத்திரங்கள் அத்துடன் வேறு கைமாற்றத்தகு சாதனங் கள் என்பவற்றை ஆக்குவதற்கும், வரையவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், புறக்குறிப்புச் செய்யவும், கொடுத்து மாற்றவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும் வழங்கவும் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளை ஆரம்பிக்கவும், செயற்படுத்தவும், பேணவும் மற்றும் முடிவுறுத்தவும் ;

(ஈ) இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலா யினுஞ்சரி ஏதேனும் அரசசார்பான அல்லது அரசசார் பற்ற ஒழுங்கமைப்புகள் அல்லது வேறு ஏதேனும் ஆள் அல்லது நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள், பங்குடைமை கள் அல்லது உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாததான ஏதேனும் நிதியங்களை நிறைவேற் றுக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறை யில் முதலீடு செய்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர் களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும் பதவி நீக்குவதற்கும் சேவையை முடிவுறுத்துவதற்கும் மற்றும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங் கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்துவதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே ஆளணிகளைப் பயிற்றுவிப்பதற்கும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் திறன்படவும் நிறைவேற்றுவதற்காக அவசியமாக இருக்கக்கூடியவாறான அல்லது உசிதமான வேறு எல்லாக் கருமங்களையும் செய்வதற்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவகித்தலும் ஆனது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளினால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவி தாங்குநர்களின் அத்தகைய எண்ணிக்கையினைக் கொண்டுள்ள நிறைவேற்றுக் குழுவினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிறைவேற்றுக்குழுவின் பதவிதாங்குநர்களில் ஒருவர் சமூகசேவைகள் எனும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் உதவிச் செயலாளர் என்ற பதவிக்கு குறையாத அலுவலர் ஒருவராகவும் அத்தகைய அமைச்சரால் நியமிக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் நிறைவேற்றுக்குழுவாதல் வேண்டும்.

(4) காப்பாளர்கள் உள்ளடங்கலாக நிறைவேற்றுக்குழுவின் பதவிவழி உறுப்பினர் எவரும் அதே பதவியில் தொடர்ச்சியாக மூன்றாண்டுகளுக்கு மேல் பதவி வகித்தலாகாது.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மை கொண்டும் பின்வரும் எல்லாகக் கருமங்களுக்காக அல்லது அவற்றில் ஏதேனுமொன்றிற்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ் செய்தல் மற்றும் உறுப்பினர்களைச் சேர்த்தல் உறுப்பினர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகுதலும் அத்துடன் உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலதான உறுப்பாண்மைக் கட்டணங்களும் ;

(ஆ) நிறைவேற்றுக்குழு மற்றும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(இ) நிறைவேற்றுக்குழுவின் பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது அவர்களின் பதவிகளை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதலும் அத்துடன் பதவிதாங்குநர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், மற்றும் முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனமும் தத்துவங்களும் பணிகளும் கடமைகளும் அத்துடன் நியதிகளும் நிபந்தனைகளும் ;

(உ) நிறைவேற்றுக்குழு, கூட்டுத்தாபனம் அல்லது அதன் ஏதேனும் உபகுழு கூட்டங்களைக் கூட்டுவதற்கும் நடாத்துவதற்கும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் வெற்றிடங்களை நிரப்புதலும் அறிவித்தல்களும் அத்தகைய கூட்டங்களின் நிகழ்ச்சிநிரலும் கூட்ட நடப்பெண் மற்றும் அதன் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியைப்போன்று அதே கூட்டமொன்றில், அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரத்திலும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகை, கட்டணங்கள் மற்றும் மானியக் கொடை என்ற வகையாக கிடைக்கப்பெறும் எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலிலும், புரிவதலிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் ஈடுசெய்வதற்குத் தேவைப்படுகின்றதான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் நிறைவேற்றுக்குழுவினால் நியமிக்கப்படும் தகைமைவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளபடியான மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக் களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாப னத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*மன்றத்தால் செலுத்தப்படற் பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**10**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டுத்தாபனத் தால் ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாசனக் கையளிப்பு அல்லது வேறுவகையாக அதன் பயனைக்கொண்டு அதற்குரித்தாக்கப்படக்கூடியவாறான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் எடுப்பதற்கும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படலும் வேண்டும். கூட்டுத்தாபனம் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க முழுத்தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக் கலாம்.*

**11**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத் தின் தனிசுகளை அல்லது பொறுப்புக்களைத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக அத்தகைய கூட்டுத்தாபனம் காலத்திற்குக்காலம் வருமதியாக இருக்கக்கூடியதான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்து வதற்கு ஆளாதலாகாது.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**12**. கூட்டுத்தாபனமானது இலாபநோக்கற்ற ஒழுங்கமைப்பு ஒன்றாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் வருவாய்கள், இலாபங்கள் அல்லது பங்கு இலாபங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றின் பாகம் எதுவும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களி டையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது.

*கூட்டுத்தாபனம் இலாப நோக்கமற்ற ஒழுங்கமைப்பு ஒன்றாதல்.*

*கலைப்பின் மீது எஞ்சி யிருக்கின்ற ஆதனம்.*

**13.** (அ) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான பணம் அல்லது ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய பணம் அல்லது ஆதனம் கூட்டுத் தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின் படி அத்தகைய நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தின் அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவுமான நிறுவனமொன்றிற்கு அல்லது நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற் றப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் நோக்கங்களுக்காக தோதான நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கலைப்பதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுல் ஆகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேர் களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*